[1994 ஏப்ரல் 4

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமை காரணமாக புதிதாக அரசு கல்லூரி தொடங்கப்படுவதில்லை. எனினும் தனியார் கல்வி முகமைகள் நிதியுதவி பெறாத தனியார் கல்லூரிகள் தொடங்க அனுமதி கோரி விண்ணப்பித்தால் சில நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு அனுமதி வழங்கி வருகிறது. தஞ்சை மற்றும் நாகை மாவட்டங்களில் 8 கல்லூரிகள் தற்போது இயங்கி வருகின்றன. தஞ்சாவூரில் இரண்டும், கும்பகோணத்தில் இரண்டும், பூண்டியில் ஒன்றும், அதிராம்பட்டினத்தில் ஒன்றும், பொறையாறில் ஒன்றும், வல்லத்தில் ஒன்றும் என்று எட்டு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மகளிர் கல்லூரிகள் இல்லாத இடங்களில் அரசு கலைக் கல்லூரிகளில் 30 விழுக்காடு மகளிர் அனுமதிக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை இட்டிருக்கிறது. ஆகவே, தற்போது இதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீடிக்கப்படுகிறது.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அரசின் நிதிநிலை காரணமாக தனியாக கல்லூரி அமைப்பதற்கான வாய்ப்பு இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார் கல்லூரி அமைப்பதற்கு முன் வந்தால் அதற்கு அனுமதி தரப்படும் என்று சொன்னார்கள். ஆகவே, இன்றையதினம் மன்னார்குடி நகரத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற தூயகொண்டான் பெண்கள் மேல்நிலைப்பள்ளி தாங்கள் ஒரு கல்லூரி நிறுவுவதற்கு அனுமதிக் கேட்டு மனு கொடுத்திருப்பதாக தெரியவருகிறது. அதற்கு அரசினுடைய அங்கீகாரம் உடன் அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட விண்ணப்பம் வந்திருந்தால் அரசின் விதிமுறைகளின்படி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 176, டாக்டர் எஸ். சுந்தரராஜ் ; மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

1994 ஏப்ரல் 4]

176–

பரமக்குடியில் கூட்டுறவு நகர வங்கிக் கிளை ஆரம்பித்தல்.

***16728 –டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடியில் கூட்டுறவு நகர வங்கிக் கிளை ஆரம்பிக்க அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி நகரத்தில் ஏற்கெனவே கூட்டுறவு வங்கி ஒன்று செயல்பட்டு வருகிறது. இவ்வங்கியின் கிளையினை பரமக்குடியில் துவக்குவது குறித்து கருத்துரு எதுவும் வரப்பெறவில்லை. தனது கிளையை பரமக்குடியில் துவக்குவதற்கு அனுமதி கோரி பரமக்குடி கூட்டுறவு நகர வங்கி இந்தியத் தலைமை வங்கிக்கு கடிதம் எழுதியுள்ளது. பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பாக நடைபெறுகின்ற கூட்டுறவு வங்கிகளில், லாபகரமாக நடைபெற்று வருகின்ற வங்கிகளில் பரமக்குடி நகர கூட்டுறவு வங்கியும் ஒன்றாகும். அங்கே கிளை ஆரம்பிப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருப்பதாக பரிந்துரைக்கப்பட்டு பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்கின்றன. கூட்டுறவுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து கூட்டுறவு வங்கிகளைப் பெருக்குகின்ற வகையில் செயல்பட்டு வருகின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அவ்வாறு பரிந்துரைக்கப்பட்டு சாத்தியக்கூறுகள் இருப்பதாக கணக்கிடப்பட்ட பரமக்குடி கூட்டுறவு நகர வங்கியின் கிளையை இந்த ஆண்டாவது ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து ஆரம்பிக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி கூட்டுறவு நகர வங்கி 1992 ஆம் ஆண்டு மே மாதத்தில் கிளை ஒன்றை திறக்க இந்திய தலைமை வங்கியின் அனுமதி கோரி எழுதப்பட்டுள்ளது. பரமக்குடி கூட்டுறவு நகர வங்கியின் முன்மொழிவுகளைப் பரிசீலித்துப் பின்னர் இந்திய தலைமை வங்கி கிளை துவக்குவது தொடர்பாக புதிய படிவத்தின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு 12-8-1993 ஆம் தேதி கடிதம் மூலமாக கேட்டிருந்தது. அதற்கு புதிய படிவத்தை 5-10-1993-ல் இந்திய தலைமை வங்கிக்கு எழுதி அனுப்பியிருக்கிறோம். அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருந்து செயல்படுகின்ற பரமக்குடி கூட்டுறவு நகர வங்கிக்கு இந்திய ரிசர்வ் வங்கியினுடைய ரீ-பைனான்ஸ் கடன் கிடைக்கவும், சிறு தொழில் முனைவோருக்கு முன்னுரிமைக்கடன் கிடைக்கவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரமக்குடி நகர கூட்டுறவு வங்கி லாபத்தில் இயங்குகிறது என்று முதலிலேயே எடுத்துச் சொன்னார்கள். எனவே, ஒவ்வொரு நகர கூட்டுறவு வங்கியும் தன்னுடைய சொந்த மூலதனத்திலிருந்து தான் மக்களுக்கு கடன் தந்து கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்குப் பார்க்கின்றபோது பரமக்குடி கூட்டுறவு வங்கி ஏற்கனவே லாபத்தில் நடைபெறுகின்ற காரணத்தால் தலைமை வங்கியிடமிருந்து ரீ-பைனான்ஸ் பெறவேண்டிய அவசியம் இல்லை. இதுவரையில் தங்களுக்குக் கடன் கிடைக்கவில்லை என்று எந்தவிதமான புகாரும் அந்த வங்கிக்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 177, திரு. எம்.கே. பாலன்; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

177--

ஆலந்தூர், கிண்டி தொழிற்பேட்டை கல்லாற்றுப் பாலத்தை மேம்பாலமாக விரிவுபடுத்துதல்.

***9539--திரு. எம்.கே. பாலன்:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஆலந்தூர் சாலையையும் கிண்டி தொழிற்பேட்டையையும் இணைக்கும் கல்லாற்றுப் பாலத்தை, மேம்பாலமாக விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

திரு. எம்.கே. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சென்னையில் போக்குவரத்து அதிகமாகி நெரிசல் இருப்பதை தாங்களும் அறிந்திருப்பீர்கள். ஆகவே நெரிசலைத் தவிர்ப்பதற்காக மேம்பாலத்தை விரிவுப்படுத்த அரசிடம் அடுத்த ஆண்டாவது திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.